**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 12 of 2025

Depositions of PW - 8 witness for ________ Prosecution / Defence / Court

Name : திரு. ஜெபஸ்டீன்

Father's Name :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th **day of March** 2026.

**(1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. 2ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355ன் படி மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்பொழுது தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்று பொள்ளாச்சியல் குடியிருந்து வருகிறேன். கடந்த 19.11.2014ம் தேதி நான் நெகமம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக நிலைய அலுவலில் இருந்தபோது பொள்ளாச்சி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கபெற்ற இன்டிமேசனை பெற்று மருத்துவமனைக்கு சென்று அட்மிட்டில் இருந்த முருகேசன் என்பவரை விசாரித்து அவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தினை பெற்று வழக்கின் தன்மைப்படி நெகமம் காவல் நிலைய குற்ற எண்.343/2014 சட்டப்பிரிவு 294(b), 323, 324 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார்

மனுவினை இணைத்து நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.II பொள்ளாச்சி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன்.

2. அதன்பின்னர் அன்றைய தினமே 19.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சக்தி மற்றும் மயில்சாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. சாட்சிகள் முருகேசன், பாலசுப்ரமணியம், மாகாளி, காளிமுத்து, மாசிலாமணி, சக்திவேல், மயில்சாமி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். கடந்த 24.11.2014 ம் தேதி எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். அதன்பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சி முருகேசன் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சிவக்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயசான்றிதழ் பெற்றேன். மருத்துவர் வழங்கிய காயசான்றிதழில் மேற்படி அசா.1 க்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் என்று மருத்துவ கருத்துறையை வழங்கியதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 294(**b**), 323, 324 இதசவிலிருந்து 294(**b**), 323, 326 இதசவாக மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து 31.12.2014 ம் தேதியன்று சட்டப்பிரிவுகள் 294(**b**), 323, 326 இதசவின் படி குற்றம் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>1 ம், 2 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனது விசாரணையின் படி வழக்கு சம்பவமானது 18.11.2014-ம் தேதி நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் ஆனது 19.11.2014 ஆம் தேதி காலை 9:30 மணிக்கு தரப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் அளிக்க ஏற்பட்ட காலதாமதத்தை நான் எனது புலன் விசாரணையில் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் மருத்துவமனையில் இருந்து தகவல் கிடைத்தவுடன் மருத்துவமனை சென்று வாக்குமூலம் பதிவு செய்தோம். இருவர்களுக்கும் நிலம் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது அது சம்பந்தமாக நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன், எனது விசாரணை அறிக்கையிலும் குறிப்பிட்டுள்ளேன்.

2. புகார்தாரர் எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் தடி மற்றும் கல் ஆகியவற்றை இவ்வழக்கில் ஆஜர் செய்துள்ளேனா என்றால் ஆஜர் செய்யவில்லை. குறிப்பாக எந்த சர்வே நம்பரில் சம்பவம் நடைபெற்றது என்று விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. அசா.1 மண் எடுத்து வந்ததாக சொல்லியுள்ள நிலையில் எங்கு இருந்து மண்

எடுத்து வந்தார் என்று விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் விசாரிக்கவில்லை. டிராக்டரின் பதிவெண் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. நான் தயார் செய்ததாக சொல்லப்படும் மாதிரிவரைபடத்தில் டிராக்டர் இருந்ததற்கான எந்த குறிப்புகளும் இல்லை என்றால் சரிதான். இதே சம்பவத்தில் எதிரிகளுக்கும் காயம் ஏற்பட்டு அவர்களும் மருத்துவமனையில் இருந்தார்கள் என்ற விவரம் எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் அது சம்பந்தமாக எனக்கு தெரியவில்லை என்னிடம் எந்த புகார் பெறவில்லை. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் வழகரு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.03.11 20:05:51 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**